# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஓகத்து மாதம் 26 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.25** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2011 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

[*2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ. ஓ. கூட். 6/2011*

## லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

*"லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இது காலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்களின் நன்மைக்காக இருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1***. *இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

***2***. *இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றத்தின் தற் போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்"*

2-PL 005428 -990 (2011/01)

எனக் குறிப்பீடு செய்யப்படும்) “லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றம்” என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.*

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கைத் திரைப்படத்துறையை அபிவிருத்தி செய்வதும் ஊக்குவிப்பதற்கும் நிலைபெறச் செய்வதற்கும் அதனோடு தொடர்புடைய ஆட்களுக்கு உதவியளித்தலும் ;

(ஆ) சிறுவர்களுக்கும் வயதுவந்த இளைஞர்களுக்கும் சினிமாவையும் சார்புடைய கலைகளையும் கைப்பணிகளையும் ஊக்குவித்தலும் பேணி வளர்த்தலும் ;

(இ) கல்வி சார்ந்த விஞ்ஞான, கலாசார, இலக்கிய கலைத்துறை சார்ந்த மற்றும் இயன்முறை ஆற்றல்களையும் திறமைகளையும் ஊக்குவித்தலும், மேம்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும் நிதியுதவியளித்தலும் பேணுதலும் ;

(ஈ) மனிதாபிமான இலட்சியங்களையும் சனநாயக மற்றும் பன்மைவாத விழுமியங்களையும் நற்குடியுரிமையையும் நாட்டுப்பற்று சார்ந்த கருத்துப்படிவத்தையும் நம்பிக்கைகளையும் ஊக்குவித்தலும் பரப்புதலும் பேணி வளர்த்தலும் ;

(உ) தொழில் முயற்சி, ஆராய்ச்சி, தொழிற்பயிற்சி, தொழில் நுட்பவியல், முகாமைத்துறை என்பவற்றிலுமான திறமைகளையும் ஆற்றல்களையும் வருமானம் உண்டு

பண்ணும், சுயதொழில் முயற்சிகள், தொழில்முயற்சி என்பன பற்றிய கருத்துப் படிவத்தையும் மேம்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும் உருவாக்குதலும் பேணி வளர்த்தலும் பராமரித்தலும் ;

(ஊ) விஞ்ஞானம், கலாசாரம், கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளிலும் மனித அபிவிருத்தியின் மற்றெல்லா அம்சங்களிலும் ஆராய்ச்சியையும் ஆராய்ச்சி வசதிகளையும் தாபித்தலும் மேம்படுத்துதலும் ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும் பேணுதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதில் அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புகளுக்கும் தனியாட்களுக்கும் தேவைப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் மதியுரை வழங்குதலும் உதவுதலும் ;

(ஏ) அச்சுருவிலாயினுஞ்சரி, இலத்திரனியலிலாயினுஞ்சரி, வேறு ஏதேனும் ஊடகத்திலாயினுஞ்சரி எழுத்துப் படிவங்கள், கையெழுத்துப் பிரதிகள், நூல்கள், கடிதங்கள், கட்டுரைகள், கவிதைகள், புகைப்படங்கள், அச்சுப் படிவங்கள் என்பன உட்பட லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், சுமித்ரா பீரிஸ் ஆகிய இருவரினதும் திரைப்படத்துறையையும் வேறு துறைகளையும் சார்ந்த படைப்புகளைப் பேணிக்காத்தலும் ஊக்குவித்தலும் ;

(ஐ) லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், சுமித்ரா பீரிஸ் ஆகியோருக்குச் சொந்தமானவையும் அவர்களால் பயன்படுத்தப்பட்டவையுமான திரைப்பட உபகரணங்களையும் தனிப்பட்ட நினைவுக் குறிப்புக்களையும் பேணிக்காத்தல் ;

(ஒ) எவரேனும் இலங்கை திரைப்படத் தயாரிப்பாளரின் திரைப்படத்துறை சார்ந்த படைப்புகளை அல்லது வேறு படைப்புகளையும் ஊக்குவிப்பதற்கும் பேணிக்காப்பதற்கும் சுவடிக் கூடங்களைப் பேணுதல் ;

(ஓ) பொதுவில் அல்லது குறிப்பிடப்பட்ட துறைகளில் ஆக்கத் திறன்களை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் பரிசுகளை, சன்மானங்களை, விருதுகளை அல்லது புலமைப் பரிசில்களை வழங்குதல் ;

(ஔ) கருத்தரங்குகள், கூட்டங்கள், செயலமர்வுகள், உரையாடல்கள், சொற்பொழிவுகள், வகுப்புகள், திரைப் படங்கள், திரைப்படக் காட்சிகள், செய்முறை விளக்கங் கள், விளையாட்டுகள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் என்பவற்றை ஒழுங்கு செய்தலுதம் நடத்துதலும் அவற் றில் பங்குபற்றுதலும் இதன்கண் குறித்துரைக்கப் பட்டவையும் குறிப்பாக கல்விச் செயற்பாட்டின் எல்லாத் துறைகளிலும் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதற் கும் நூல்களையும் சஞ்சிகைகளையும் கட்டுரைகளையும் செய்தித்தாள்களையும் எழுதுதலும், அச்சிடுதலும் வெளியிடுதலும் ;

(க) நூலகங்களையும் வேலைக்களங்களையும் வாசிகசாலை களையும் தாபித்தலும் பேணுதலும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை கருத்திற்கொண்டு அவற்றிற்குச் சாதன வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ங) கட்டுரைகளை, பருவ வெளியீடுகளை அல்லது கூட்டுத் தாபனத்தின் நோக்கத்திற்கு அவசியமானவை அல்லது பயனுள்ளவை என எண்பிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு இலக்கியங்களை வெளியிடுதல் ; அத்துடன்

(ச) ஒன்றில் கைம்மாறு கருதாத அல்லது வேறு வகையில் விரும்பத்தக்கதென தோன்றும் எவையேனும் நம்பிக்கைப் பொறுப்புகளை பொறுப்பேற்றலும் நிறை வேற்றுதலும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துகையில் அத்தகைய நடைமுறைப்படுத்துத லானது இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை, அரசியல் அபிப்பிராயம் அல்லது பிறப்பிடம் என்பவற்றை அடிப்படை யாகக்கொண்ட ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கும் அமைய ஒரு தவிசாளரையும், செயலாளரையும் அத்தகைய விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட வேறு உறுப்பினர்களையும் கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால் (இச்சட்டத்தில் "சபை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) முதலாவது சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் மன்றத்தின் நிர்வாக சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னேடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், விடயங்களையும், கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது வாடகைக்குக் கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல், கொடுத்துமாற்றுதல், வேறுவகையில் பாராதீனப்படுத்துதல், பாரபந்தத்துக்குட்படுத்துல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாக இருக்ககூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்துகொள்ளுதலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளையும் கொடைகளையும் நன்கொடைகளையும் இறுதிவிருப் பாவணக் கையளிப்புக்களையும் ஏற்றுக் கொள்ளுதல் :

ஆயின், இச்சட்டத்திலுள்ள வேறு ஏற்பாடுகள் எவ்வா றிருப்பினும், வெளிநாட்டு மானியக்கொடை, கொடை அல்லது நன்கொடை தொடர்பில் நிதி என்னும் விடயத் திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அமைச்சின் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தின் எழுத்தி லான அனுமதியை சபையானது பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய மானியக் கொடை, கொடை அல்லது நன்கொடை தொடர்பிலான கூட்டுத்தாபனத் தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதி யினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) அதன் நிதிகளை முதலீடு செய்தலும், ஏதேனும் வங்கியில் நடைமுறை, வைப்பு அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும் மூடிவிடுதலும் ;

(உ) கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப் பொறுப்பின்மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக் காக பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது முதலீடு செய்தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவைப்படுத்தப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்து தல், இடமாற்றம் செய்தல், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் அவர்க ளைப் பதவிநீக்குதல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர் களினால் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லா வற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின்

அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும், அத்தகைய கூட்டங்கள் இடம்பெறும் நேரங்கள், இடங்கள், அவை பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதன் கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் அத்துடன் அதனது நிதியின் கட்டுக்காப்பும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்காக குழுக்களைத் தாபித்தல் ; அத்துடன்

(எ) நிறுவகத்தினதும் நிறைவேற்றுப் பேரவையினதும் உறுப்பினர்களின் தகைமைகளும் தகைமையீனங்களும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதே முறையில் திருத்தப் படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் கொடைகள், மரணசாசன தத்துவக் கையளிப்பு, கைமாற்றல்கள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் அல்லது ஏதேனும் நிதிசார் முதலீடுகள் என்ற வகையில் இதனகத்துமுன்னர் அல்லது இதன்பின்னர் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பேரவையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியில்அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தினது நிதியத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக் கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

*(4)* இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளாரொருவராகத் தொழில்புரியவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும். அத்துடன் சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட தவிசாளரினதும் மற்றும் ஒன்றில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட செயலாளரினதும் அன்றேல் பொருளாளரினதும் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதலும் வேண்டும்.

நிறுவகத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் நிறுவகத்திற்குச் செலுத்தப் படற்பாலனவையுமான தனிசுகள்.

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான நிறுவகத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப் படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும்

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத் தப்படலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தா பனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத் துக்காக, காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனத்துக்கு அவரிட மிருந்து வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய எல்லா உறுப் பாண்மைக் கட்டணங்களின் தொகையை எல்லா உறுப்பாண்மைக் கட்டணங்களின் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*பணங்களினதும் ஆதனத்தினதும் பிரயோகம்.*

**12.** கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டவையாக இருப்பினுஞ்சரி, இதன்கண் தரப்பட்டுள்ளவாறு அதன் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கு மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றின் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம், இலாபம் அல்லது எவ்விதத்திலாயினுஞ்சரி வேறு வகையில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபன மானது ஏதேனும் கொள்வனவு, மானிக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருக்கப்பதற்கும் சட்டப்படி ஆற்றலு டையதும் இயலுமாதலாலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகவும் 6ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும், அத்துடன் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க முழுத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன்பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதே னும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற் றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளி னால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவு மான வேறு ஏதேனும் கழகத்திற்கு அல்லது வேறு எவையேனும் கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு உடன்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கலைப்பின்மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஏதேனும் ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்